# ★ அரசியல் தஞ்சம் கோருவோரை கட்டுப்படுத்த பிரிட்டன் முடிவு!

(லண்டன்) பிரிட்டனுக்கு அரசியல் தஞ்சம் கோரி வருவோர் மீது கடுமையான நடவடிக்கைகள் மேற்கொள்ளும் வகையில் புதிய சட்டம் ஒன்றை அமுல்படுத்த பிரிட்டிஷ் அரசு முடிவு

(4ம் பக்கம் பார்க்க)

விலை ரூபா 5-00

ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 33 திருவள்ளுவர் ஆண்டு 2022 ஐப்பசி 18 இதழ்: 265
யாழ்ப்பாணம் திங்கட்கிழமை 04-11-1991

கருப்புசாமி விவகாரம்:

## இந்தியப் பிரதமரின் விஜயம் குறுகியதற்கு காரணம்

(லண்டன்) இந்திய வானொலி செய்தியாளர் திரு. கருப்புசாமி இலங்கையிலிருந்து வெளியேற்றப்பட்டதை ஆட்சேபித்

(4-ம் பக்கம் பார்க்க)

## ஆனையிறவுஷெல் தாக்குதல் நான்கு பொதுமக்கள் பலி

(யாழ்ப்பாணம்) ஆனையிறவு இராணுவ முகாமைச் சேர்ந்த இராணுவத்தினர் நேற்று மேற்கொண்ட ஷெல் தாக்குதலில்

(4-ம் பக்கம் பார்க்க)

கண்டி - பன்னலயில் நடைபெற்ற

# லலித்-காமினி குழு கூட்டத்தில் குண்டுவெடிப்பு; பலர்படுகாயம்

### சந்தேக நபர்கள் ஜீப்பில் தப்பியோட்டம்

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் அதிருப்தியாளர் குழுவைச் சேர்ந்த திரு. லலித் அத்துலத் முதலி-காமினி திசநாயக்கா கோஷ்டியினர் நேற்று முன்தினம் கண்டி பன்னலையில் நடத்திய மாபெரும் கூட்டத்தில் சக்தி வாய்ந்த குண்டு ஒன்று வெடித்தது. இச்சம்பவத்தில் பலர் படுகாயமடைந்ததாகவும், பல வாகனங்கள், வீடுகள் சேதமடைந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

கண்டி மாவட்டத்திலுள்ள பன்னல என்ற இடத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற அதிருப்தியாளர்களின் பேரணிக் கூட்டத்தில் பெருந் தொகையான மக்கள் கலந்து கொண்டனர்.

அவர்வலமாக கூட்டத்திற்கு மக்கள் வந்தபோது குண்டுத் தாக்குதல்கள் நடாத்தப்பட்டதாகக் கூறப்படுகிறது.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற இச் சம்பவம் தமது அறப்போராட்டத்தைக் குலைக்க அரசு செய்த திட்டமிட்ட சதி என்று திரு. காமினி திசநாயக்கா அரசை வெளிப்படையாகவே குற்றஞ் சாட்டினார்.

இப்பேரணியில் குண்டு வெடிப்புச் சம்பவத்தை நடத்தியதாகக் கருதப்படும் சந்தேகநபர்கள், ஜீப் ஒன்றில் தப்பிச் சென்றனர் எனவும், இச்சம்பவத்தில் பலவாகனங்க

(4-ம் பக்கம் பார்க்க)

## தென்பகுதி மக்கள் எதிர்பார்ப்பு

(கொழும்பு) கடந்த சனிக்கிழமை கண்டியில் இடம் பெற்ற குண்டு வெடிப்பு சம்பவத்தை போல் கொழும்பில் சார்க் மாநாடு

(4-ம் பக்கம் பார்க்க)

## பூட்டான் மன்னருக்கு மீண்டும் அழைப்பு

(கொழும்பு) பூட்டான் மன்னர் வான் சுக்கை கொழும்பு சார்க் மாநாட்டில் கலந்துகொள்ளுமாறு இலங்கை அரசு மீண்டும் வலியுறுத்தியுள்ளது.

மேற்படி மாநாட்டில் இவர் கலந்துகொள்ளமாட்டார் என ஏற்கனவே அறிவித்ததை அடுத்தே இலங்கை அரசு மீண்டும் அவருக்கு அழைப்பு விடுத்துள்ளது. (மா)

## கொழும்பில் தீவிர பாதுகாப்பு ஒழுங்குகள்

(கொழும்பு) எதிர்வரும் வியாழக்கிழமை கொழும்பில் ஆரம்பமாகவிருக்கும் சார்க் மாநாட்டை முன்னிட்டு பாதுகாப்பு ஒழுங்குகள் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கேந்திர இடங்களில் நிலை கொண்டுள்ள முப்படையினரும் தனித்தனியாக கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர்.

நகருக்கு உள்ளே வரும் வாகனங்கள் மிகத்தீவிரமாக சோதனை செய்யப்பட்டு வருகின்றன

## ஸ்ரீ. ல. சு. க. தலைமைப் பதவி அநுராவுக்கு நிரந்தரமாகும்?

(கொழும்பு) சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் தற்காலிகத் தலைவரான அநுரா பண்டாரநாயக்கா தனது தலைமை பதவியை ஒரு உறுதியான ஸ்திர நிலைக்கு கொண்டு வந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளையில் மக்கள் சுதந்திரக் கட்சித் தலைவியான திருமதி சந்திரிகா குமாரணதுங்க தனது கட்சியை கலைத்து விட்டு சிறிலங்கா சுதந்திரக்

(4-ம் பக்கம் பார்க்க)

### விடுமுறை

தீபாவளித் தினமான நாளை (5-11-91), ஈழநாடு ஊழியர்களுக்கு விடுமுறைத் தினமாதலால், 6-11-91 புதன் கிழமை மட்டும் 'ஈழநாடு' வெளிவராது என்பதை வாசகர்களுக்கு அறியத் தருகின்றோம்.

நிர்வாகி

## அரசாங்க ஊழியர்களுக்கு 500 ரூபா சம்பள உயர்வு

(கொழும்பு) அரசாங்க ஊழியர்களின் மாதாந்த சம்பளம் ஐந்நூறு ரூபாவினால் அதிகரிக்கப்பட இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இம்மாதம் 12ம் திகதி சமர்ப்பிக்கப்படவிருக்கும் வரவு-செலவுத் திட்டத்தில் இந்த அதிகரிப்பு இடம் பெறவுள்ளது.

அதிகரிக்கப்படவிருக்கும் இத்தொகை ஒய்வூதியம் பெறு

[4ம் பக்கம் பார்க்க]

### படையினர் மீது ஷெல் வீச்சு

(யாழ்ப்பாணம்) பூநகரி, செட்டியார் குறிச்சி ஆகிய பகுதிகளில் நிலை கொண்டுள்ள ஸ்ரீலங்கா இராணுவத்தினர் மீது விடுதலைப் புலிகள் நேற்று முன் தினம் பலத்த ஷெல் தாக்குதலை மேற்கொண்டனர்.

புலிகளின் தாக்குதலினால் படையினர் தரப்பில் பலத்த சேதமேற்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ஈ)

## மட்டக்குளியில் பெருமளவு குண்டுகள் கண்டுபிடிப்பு!

(கொழும்பு) கொழும்பு பகுதியில் பெருமளவில் குண்டுகள் தயாரிக்கப்பட்ட நிலையிலும். துப்பாக்கி குண்டுகள், வெடிமருந்துகள் ஆகியவற்றை உள்ளடக்கிய நிலையில் வீடு ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

பொலிசாருக்கு கிடைத்த இரகசியத் தகவல்களையடுத்து மட்டக்குளி பகுதியில் இந்த

(4-ம் பக்கம் பார்க்க)

### யாழ். பல்கலைக்கழக பேரவைக்கு எட்டுப் பேர் நியமனம்

(யாழ்ப்பாணம்) யாழ். பல்கலைக் கழக பேரவையின் புதிய அங்கத்தவர்களாக எட்டுப் பேர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்கள்.

புதிய அங்கத்தவர்களின் பெயர்கள் வருமாறு:

[4-ம் பக்கம் பார்க்க]

## வரி விளம்பரம்

### தொழிற்பயிற்சிகள்

றேடியோ, T. V. வீடியோ டெக், றிப்பெயறிங், றீவைண்டிங், எலக்றிக்கல் வயறிங், Engineering Drawing, Diploma in Draughtsmanship எயர் கொண்டிசன் றிப்பெயறிங் ஆகிய தொழிற்பயிற்சிகள் கூடிய நேர செய்முறை பயிற்சியுடன் பயிற்றுவிக்கப்படும். ஆரம்பம்: 07-11-1991 விபரங்களுக்கு:- Jaffna Technical Institute, கிராண்ட் வீதி, (றெயில்வே கடவை அருகாமை) யாழ்ப்பாணம்.

(சி-1686)

## மாதாந்த உதவிப் பணம்

(சித்தன்கேணி)

காரைநகர் துணைநிலையத்தோர்களில் பொதுசன மாதாந்த உதவிப்பணம் பெற்று வந்தவர்களுக்கு செப்டம்பர் மாதத்துக்கான பொதுசன மாதாந்த உதவிப்பணம் இன்று திங்கட்கிழமையும் 7-ம் திகதி வியாழக்கிழமையும் சங்கானை உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் வைத்து விநியோகிக்கப்படவுள்ளதாக ஊர்காவற்துறை உதவி அரசாங்க அதிபர் திரு. கெ. யோசப் தெரிவித்துள்ளார். (137)

## மாவீரர் படங்கள்

(பண்டத்தரிப்பு)

மாவீரர் வாரத்தை முன்னிட்டு பண்டத்தரிப்பு பகுதியில் மறைந்த மாவீரர்களின் திருவுருவப் படங்களை வைப்பதற்காக பண்டத்தரிப்பு சந்தியில் குடை போன்ற அமைப்புடைய சுற்றுவட்ட மேடை ஒன்று துரிதகதியில் நிர்மாணிக்கப்பட்டு வருகின்றது. (72)

## புனித சாள்ஸ் தினவிழா

(ஊர்காவற்றுறை)

யாழ் புனித - சாள்ஸ் மகா வித்தியாலயத்தில் இன்று 4-ம் திகதி திங்கட்கிழமை புனித-சாள்ஸ் தினவிழா கொண்டாடப்படவிருக்கிறது. (59)

## கட்டாக்காலி நாய்கள் தொல்லை

(கொழும்புத்துறை)

யாழ். மாநகர சபைப் பகுதிகளில் கட்டாக்காலி நாய்களின் தொல்லை நாளுக்குநாள் அதிகரித்துவருகிறது.

வீதிகளில் விசர் நாய்கள் கூடுதலாகத் திரிகிறது. அண்மையில் மணிப்பாய், எழிலூரில் விசர்நாய்க்கடிக்கு இருவர் பலியாகியுள்ளனர்.

பெருமளவான இடங்களில் நாய்கள் பெருகியுள்ளமையால் அந்தத் தீர்வை காணக் கூடியதாக இருக்கிறது. [104]

## கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்ட அரச ஓய்வூதியர் சங்க விசேட பொதுக்கூட்டம் எதிர்வரும் 16-ம் திகதி சனிக்கிழமை நடைபெறும். (52)

## மரக்கன்றுகள் விநியோகம்

(யாழ்ப்பாணம்)

ஐம்பதினாயிரம் எலுமிச்சை மரக்கன்றுகளும், ஆயிரக்கணக்கான அகத்தி, பனை, நெல்லி ஆகிய மரக்கன்றுகளும் விநியோகம் செய்வதற்கு தமிழீழ ஆய்வு நிறுவனத்தில் தயாராக உள்ளன.

தேவைப்படுவோர் தமிழீழ ஆய்வு நிறுவனத்துடன் தொடர்புகொள்ளுமாறு தமிழீழ ஆய்வு நிறுவனம் கேட்டுள்ளது.

## பாராட்டு விழா

(பருத்தித்துறை)

வடமராட்சிக் கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளராக பதவியுயர்வு பெற்றுள்ள திரு. வி. சே. ஏகாம்பரநாதனுக்கு வேலாயுதம் மகாவித்தியாலய பழைய மாணவர் சங்கம் பாராட்டு விழாவொன்றை நடாத்தவுள்ளது. (52)

0 0

(பருத்தித்துறை)

எழுத்தாளரும், வைத்திய கலாநிதியுமான எம். கே. முருகானந்தனின் இலக்கியத்துறைச்சேவையைப் பாராட்டி இலங்கை சைவமன்றம், பருத்தித்துறையார் நூலகத்தின் மண்டபத்தில் பாராட்டுவிழா வொன்றை நடாத்தியது. (54)

0 0

(பருத்தித்துறை)

வர்த்தகத்துறையில் முன்னணியில் திகழும் வடமராட்சி இந்து மகளிர் கல்லூரியின் விரைவில் வர்த்தக பாடங்களில் முன்னணியில் திகழும் மாணவிகளைப் பாராட்டி விழாவொன்று நடாத்தப்படவுள்ளது. (52)

## சண்டிலிப்பாயில் மாவீரர் தின ஏற்பாடுகள்

(பண்டத்தரிப்பு)

சண்டிலிப்பாய் வட்டுவை பிரதேசத்தில் மாவீரர் தினத்தை சிறப்பாகக் கொண்டாடுவதற்கான ஒழுங்குகள் துரிதகதியில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. முதல் கட்டமாக வீதி ஓரங்கள் யாவும் துப்பரவு செய்யப்பட்டு அழகு படுத்தப்பட்டு வருகின்றது.

சண்டிலிப்பாய் சீரணி சந்தியில் பெரிய அலங்கார வளைவு மாவீரர் தினத்தை முன்னிட்டு நேற்று அமைக்கப்பட்டுள்ளது. சண்டிலிப்பாய் பிரதேசப் பொறுப்பாளர் திரு வேங்கையன் மாவீரர் தின நிகழ்ச்சிகளை இப்பகுதியில் சிறப்பான முறையில் நடாத்துவதற்கான ஒழுங்குகளை செய்து வருகின்றார். (72)

## புதிய உணவு முத்திரை விநியோகம்

(மானிப்பாய்)

யாழ் சமூகசேவைப்பகுதினரால் 6வது தொடர் இலக்க புதிய உணவு முத்திரைகள் ஒவ்வொரு உதவி அரசாங்க அதிபர் அலுவலகங்களுக்கும் விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

இவ் உணவு முத்திரைகள் தற்போது சாவகச்சேரி, மருதங்கேணி, சங்கானை, சாவகச்...

சேரி ஆகிய உதவி அரசாங்க அதிபர் பணிமனைகளுக்கு வழங்கப்பட்டுள்ளதாகவும் ஏனைய உதவி அரச பணிமனைகளுக்கு வழங்குவதற்கு வாகன வசதிகள் இல்லாத காரணத்தினால் காலதாமதம் ஏற்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (71)

## உணவுப் பொருள் விநியோகம்

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்பு பனாறாக்குக் கூட்டுறவுச்சங்கம் கடந்த மாதம் 29-ம் திகதி தொடக்கம் 18-ம் கட்டத்திற்கான உணவுப்பொருட்களை வாகன மாளர்களுக்கு விநியோகித்துள்ளது.

இதுவேளை இடம்பெயர்ந்தவர்கள் குடும்பங்களுக்கு இரு கட்டங்களுக்கான இலவச நிவாரணப்பொருட்களும் தற்போது வழங்கப்பட்டு வருகிறது. (72)

## பரிசளிப்பு விழா

(பண்டத்தரிப்பு)

சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலய வருடாந்த பரிசளிப்பு விழாவும் ஆசிரியர் தின விழாவும் இன்று 4-ம் திகதி திங்கட்கிழமையன்று நடைபெறவுள்ளது.

வித்தியாலய அதிபர் கா. சந்திரபாலன் தலைமையில் நடைபெறவுள்ள இவ்விழாவில் பிரதம அதிதியாக பண்டத்தரிப்பு கல்விக்கோட்ட பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. ப. சண்முகராசா கலந்து கொள்வார். கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறவுள்ளன. (72)

## உதவி அரச அதிபர் பிரிவு

(யாழ்ப்பாணம்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் மேலும் ஒரு உதவி அரச அதிபர் பிரிவு நிறுவப்படவுள்ளது.

துறைநீலாவணை ... கோட்டைக்கல்லாறு வரையிலுள்ள பிரதேசங்களை உள்ளடக்கி கல்லாறு உதவி அரச அதிபர் பிரிவு ஏற்படவுள்ளது. (56)

## அலுவலகம் இடமாற்றம்

(பருத்தித்துறை)

மெதடிஸ்த பெண்கள் உயர்தரக் கல்லூரியில் இயங்கி வந்த வடமராட்சி கோட்டக் கல்வி அலுவலகம் மீண்டும் பருத்தித்துறை வேலாயுதம் மகாவித்தியாலயத்திற்கு மாற்றப்பட்டுள்ளதாக பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு எஸ். செல்லத்துரை தெரிவித்துள்ளார். (52)

**NEW SCIENCE ACADEMY JAFFNA**

★ தாவரவியல் ★

★ அங்கியஸ்பேர்ம்களின் உருவவியல் ★
(Morphology of Angiosperms)

திரு. வி. எஸ். குணசீலன்

செவ், புதன் 2-30 — 330 பி. ப.

ஆரம்பம்: 04-11-1991 Mon. 2-30 p. m.

● O/L பரீட்சை நடைபெற்ற பின்னரேயே 93ஆம் கல்வியாண்டுக்கான தாவரவியல் வகுப்புக்கள் ஆரம்பிக்கப்படும்.

(எ-1692)

## இராசி பலன்

04-11-1991
திங்கட்கிழமை
(தமிழுக்கு ஐப்பசி 18)

திரயோதசி மாலை 5-47 வரை; அத்தம் மாலை 5.18 வரை, இராகு காலம் 7.34 முதல் 9-04 வரை: சுபநேரம் காலை 12.04 முதல் 1.34 வரை; சித்தயோகம்.

மேடம்: செல்வாக்கு, தனப்பெருக்கம், சிந்தனைத்தெளிவு;

இடபம்: எதிர்களால் இடையூறு, நண்பர் பிரிவு, வீண் செலவு;

மிதுனம்: முயற்சியில் தோல்வி, முணுமுணுத்தல், மனமுடை.

கடகம்: எதிர்பாராத உதவி, குடும்ப சுகம், காரிய சித்தி.

சிங்கம்; கடின நெஞ்சம், மனச்சிக்கல், குடும்பக் கவலை.

கன்னி: சாஸ்திர அறிவு, தற்பெருமை, கலந்துரையாடல்;

துலாம்: அவசரக்கோலம், கருத்துமோதல், அலைச்சல்.

விருச்சிகம்; கடின உழைப்பு, ஜயலாபம், வரவு.

தனுசு: மாதா பிதா துன்பம், பயணக் களைப்பு. குடும்ப சுகம்.

மகரம்; சொத்துக்கள் உடைமை, கடின முயற்சி, ஏமாற்றம்.

கும்பம்: மனமோசடி, குமுறும் நெஞ்சம், மனப்போராட்டம்

மீனம்: அதிகார மேன்மை, லட்சுமி கடாட்சம், வெற்றி வாய்ப்பு.

ஜோஸ்யர்

## 3-ஆம் ஆண்டு நினைவலைகள்



**கனகசபை தனபாலசிங்கம்**
(பொதுசனத் தொடர்பு அதிகாரி
வ. பி. போ. சபை, கோண்டாவில்)

தோற்றம்: 10-03-1946 மறைவு: 04-11-1988

குலத்தினை விளக்க வந்த
குணக்குன்றே தெய்வமே எம்
நலத்தினைப் பேணி நின்றோய்
நற்றமிழ்ப் பணிகட்கெல்லாம்
பலப்பல தொண்டு செய்தோய்
பாவிகள் செய்கையாலே
நிலத்தெமைப் பிரிந்தாயேனும்
நெஞ்சினில் வாழ்கின்றாயே

குடும்பத்தினர்

காங்கேசன்துறை. (சி-5558)

## தொடரும் நினைவுகள் நான்காம் ஆண்டு

காலத்தின் மலர்வு:

9 - 6 - 1936

அகால உதிர்வு:

1 - 11 - 1987

திதி நாள்

4 - 11 - 1991



**திரு. வே. இராசதுரை B. Sc**
(ஆசிரியர்) உரிமையாளர்: இ. மகேஸ்வரி
(அளவை நிலையம், சாவகச்சேரி)

நீண்டுயர் தோற்றமெங்கே
நிறைந்த வதனமெங்கே
தூண்டினிற் புழுவாய் மண்ணில்
துடித்தழ வைத்தாய் என்றும்
ஆண்டு நான்கு கழிந்திட்டாலும்
அத்துயர் ஆறுதையா
மாண்டனை விலை நினை
வஞ்சகர் அழித்தார் அந்தோ!
பாசத்தின் திருவிளக்கே
அன்பிற்கோர் அணிகலனே!

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

மனைவி, மக்கள், உற்றார், உறவினர்.

கோவளம், காரைநகர். (ஏ-1693)

## "உணவுப் பற்றுக்குறையினால் — பட்டினிச் சாவுகள் ஏற்படுவதை முழுச்சமூகமும் தடுக்கவேண்டும்"

### பாவனையாளர் குழு கோரிக்கை

(யாழ்ப்பாணம்)
உணவுப் பற்றுக்குறை காரணமாக பட்டினிச் சாவுகள் தோன்றுவதை தடுக்க வேண்டிய கடமை முழு சமூகத்தையும் சேர்ந்த ஒரு சமூகக்கடமை என்று பாவனையாளர் குழு விடுத்துள்ள அறிக்கையொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது: யாழ்ப்பாண மக்களுக்கு எதிரான பொருளாதாரத் தடை இம்முறை மேலும் உக்கிரமடைந்து வருகிறது. இதனால் இம்மாவட்டத்தில் ஒரு பஞ்சநிலை ஏற்படும் அபாயம் தோன்றியுள்ளது. இந்நிலையில் கிடைக்கக்கூடிய பொருட்களின் விநியோகத்தைச் சீர் செய்வதன் மூலமே சகலருக்கும் பொருட்களை ஓரளவேனும் நியாயமான விலையில் விநியோகிக்கலாம்.

யாழ்ப்பாண நகர வீதிகளில் மண்ணெண்ணெய், சவர்க்காரம் போன்றவற்றைக் காணக்கூடியதாக இருக்கிறது. ஆனால் அவற்றின் விலை மக்களின் வாங்கும் சக்திக்கு மிக எட்டிய தூரத்தில் இருக்கிறது. மாதக்கணக்காக விளக்கு எரியாத வீடுகளும், அழுக்கு நீக்கப்படாத ஆடைகளும் நிரம்பிய வீடுகளும் இருப்பதை எல்லோரும் அறிவோம்.

அதே வகையில் மனிதனின் மிக அடிப்படைத் தேவையான உணவும் பற்றுக்குறையாக இருக்கிறது. விலையும் மிகக் கூடுதலாகவே இருக்கிறது. இதன்மூலம் உணவுப் பற்றாக்குறைபாட்டினால் சகல மக்களும் துன்பப்படுகிறார்கள். தற்பொழுது சில அத்தியாவசியப் பொருட்கள் கூட்டுறவுக் கடைகள் மூலம் விநியோகிக்கப்படுகின்றன. இவற்றின் எண்ணிக்கையையும் தொகையையும் நாளடைவில் கூட்ட முயற்சிகள் எடுக்கப்படவேண்டும்.

ஆனால் நமது நாடு இன்றுள்ள நிலையில் இவ்விநியோகத்தை முறையாகச் செய்ய தனியார்துறையின் ஒத்துழைப்பும் தேவை. தனியார்துறையினரும் தங்களிடம் உள்ள பொருட்களை நியாயமான விலையை நிர்ணயித்து அனைவருக்கும் கிடைக்கக்கூடியதாகப் பங்கீட்டு முறையில் விற்பனை செய்யவேண்டும் என்று விரும்புகிறோம்.

பாவனையாளர் குழுக்களின் முழு நோக்கம், கிடைக்கக் கூடிய பொருட்களை அனைவருக்கும் பகிர்ந்தளிப்பதாகும். அதே நேரத்தில் பதுக்கல், கொள்ளை இலாபம் போன்ற சமூக விரோதச் செயல்கள் தோன்றின் அவற்றைக் கட்டுப்படுத்துவதுமாகும். சொந்த சகோதரத் தமிழர்களின் துன்பங்களில் இலாபம் காண நினைக்கும் தமிழ் வர்த்தகர்கள் இல்லையென்றே நம்புகிறோம். ஆனால் நமது தனியார் வர்த்தகர்களும் நாட்டினதும், மக்களினதும் நிலைமைகளை உத்தேசித்து தங்கள் பொருட்களை நியாயமான விலையிலும், அனைவருக்கும் கிடைக்கும் வகையிலும் விற்பது பாவனையாளர் குழுக்களின் உதவியாக இருக்கும்.

உணவுப் பற்றுக்குறை காரணமாக பட்டினிச் சாவுகள் தோன்றுவதை அல்லது விநியோகக் கட்டுப்பாடு இன்மையால் சகலருக்கும் கிடைக்கக்கூடியவை இடையில் போய்விடுவதை தடுக்கவேண்டிய கடமை முழு சமூகத்தையும் சேர்ந்த ஒரு சமூகக் கடமை.

இக்கடமையை நிறைவேற்ற பொதுமக்கள், தனியார்துறை வர்த்தகர்கள், கூட்டுறவுத் துறையினர் ஆகிய அனைவரும் ஒன்றுசேர்ந்து செயற்படவேண்டும் என்று பாவனையாளர் குழுக்கள் கேட்டுக்கொள்கின்றன.

## பயிற்சி வகுப்பு

(யாழ்ப்பாணம்)
மூன்றுண்டுக் கல்வித்திட்டமிடல் பயிற்றுநருக்கான பயிற்சி வகுப்பு இன்று 4-ஆம் திகதிமுதல் 9 ஆம் திகதி வரை தினமும் காலை 8.30 மணி முதல் மாலை 4-30 மணி வரை யாழ் இந்துக் கல்லூரியில் நடைபெறும். (152)

## உதைபந்தாட்டம்: இன்றைய ஆட்டம்

(யாழ்ப்பாணம்)
கல்லூரிகளிடையே நடைபெற்றுவரும், சிநேகபூர்வமான உதைபந்தாட்டப் போட்டியின் இன்றைய ஆட்டம் யாழ்ப்பாணக் கல்லூரியும் - இளவாலை சென் ஹென்றிஸ் கல்லூரியும் வட்டுக்கோட்டையில் மோதுகின்றன.

மற்றொரு போட்டி யாழ். சென் ஜோன்ஸ் கல்லூரியும், யாழ் சுகந்தினம் மகா வித்தியாலயத்துக்குமிடையில் சென் ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

மேற்படி போட்டிகள் அனைத்தும் இன்று மாலை 2-30 மணிக்கு ஆரம்பமாகின்றன.

## ஒரு வருடமாகியும் பிறப்பு அத்தாட்சி பத்திரம் வழங்கப்படவில்லை

(சித்தன்கேணி)
சங்கானை, யாழ்ப்பாணம் ஆகிய வைத்தியசாலைகளில் பிறந்த குழந்தைகளுக்கு ஒரு வருடத்துக்கு மேலாகியும் பிறப்பு சாட்சிப்பத்திரங்கள் இதுவரை வழங்கப்படவில்லை.

இதனால் இந்தப்பிள்ளைகளின் பெற்றோர்கள் மாஃமா குழந்தை பிள்ளைகளுக்கான புதிய உணவு முத்திரைகளைப் பெறுவதற்கு மிகுந்த சிரமங்களுக்கு ஆளாகின்றனர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. (137)

## சுகாதார ஆய்வு

(பண்டத்தரிப்பு)
பண்டத்தரிப்பு சுகாதார பரிசோதகர் பிரிவிலுள்ள வடலியடைப்பு கிராமத்தில் சுகாதார சம்பந்தமான ஆய்வு மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

மலசலகூடம், கர்ப்பிணித் தாய்மார், குழந்தைப் பிள்ளைகள் ஆகியோர் பற்றிய விபரங்கள் வீடுவீடாக திரட்டப்பட்டு வருகின்றது.

0 0 0

சுகாதார பகுதியினரால் மாதகல் கிராமத்தில் வீடு வீடாக சுகாதார சம்பந்தமான ஆய்வு நடாத்தப்பட்டு வருகின்றது.

சுகாதாரப் பரிசோதகர் குடும்பநல சேவையாளர்கள் ஆகியோரின் அனுசரணையுடன் 20 பயிற்சிபெற்ற சுகாதார தொண்டர்கள் ஒவ்வொரு வீடாக சென்று மலசலகூட வசதி, கர்ப்பிணி தாய்மார் விபரம், சிறு பிள்ளைகள் விபரம் ஆகியன உட்பட பல்வேறு விபரங்களை திரட்டிவருகின்றனர். (72)

## சிவில் நிர்வாகம் ஏற்படுத்த முயற்சி

(வவுனியா)
வவுனியாவில் மீண்டும் சிவில் நிர்வாகத்தை ஏற்படுத்துவது என்று அமைச்சரவை முடிவு செய்துள்ளது.

இதற்கென புனர்நிர்மாண, புனர்வாழ்வு சமூகநல அமைச்சின் கீழ், அமைச்சர் மட்ட உப குழுவொன்றை அமைச்சரவை நியமித்துள்ளது. மாவட்ட ரீதியிலும் வடக்கு-கிழக்கு மாகாண ஆளுநர் தலைமையிலும் விசேட செயற்பாட்டுக் குழுவொன்றும் இதற்காக நியமிக்கப்பட்டுள்ளது.

இடம்பெயர்ந்தோரை மீண்டும் குடியமர்த்துவது வழமையான பொருளாதார நடவடிக்கைகளை ஆரம்பிப்பது, வீடமைப்பு, சகல பாடசாலைகளை மீண்டும் திறத்தல், கூட்டுறவு நிலையங்களைத் திறத்தல், மருத்துவ நிலையங்களை மீண்டும் இயங்கச் செய்தல், மின்சாரம், போக்குவரத்துக்களை சீர்செய்தல் போன்ற பணிகளை உடன் இயங்கவைப்பதே மேற்படி குழுக்களின் முதல் பணியாக இருக்குமென்றும் கூறப்படுகின்றது. (வி)

## ஜேப்படி திருடர்கள் 500 பேர் கைது

(சென்னை)
சென்னை நகரில் 500 ஜேப்படித் திருடர்கள் நேற்று முன் தினம் கைதுசெய்யப்பட்டனர்.

பொலிஸார் நடத்திய தேடுதல் வேட்டையொன்றிலேயே இவர்கள் கைது செய்யப்பட்டார்கள்.

## பதினெட்டு சுகாதார தரிசிப்பாளர்கள் நியமனம்

(பண்டத்தரிப்பு)
யாழ் மாவட்டத்தில் சுகாதார தரிசிப்பாளர்களாக தெரிவுசெய்யப்பட்டு தங்கள் பயிற்சியை பூர்த்திசெய்த 18 பேருக்கு கடந்தமாதம் தொடக்கம் நியமனம் வழங்கப்பட்டுள்ளது. இதில் கிளிநொச்சி மாவட்டத்தில் ஏழுபேர் நியமனம் பெற்றுள்ளார்கள்.

பொது சுகாதார பரிசோதகர்களுக்கு யாழ் மாவட்டத்தில் ஏற்பட்டுள்ள பற்றுக்குறையை அடுத்து இந்த சுகாதார தரிசிப்பாளர் சிறுவர் பாதுகாப்பு நிதியத்தின் உதவியுடன் பயிற்றுவிக்கப்பட்டு நியமிக்கப்பட்டுள்ளார்கள். (72)

## தொல்லைகொடுத்துவரும் கட்டாக்காலி கழுதை

(பண்டத்தரிப்பு)
நல்லூர், திருநெல்வேலிப் பகுதிகளில் கட்டாக்காலியாக திரியும் கழுதைஒன்றினால் வீதிகளில் போக்குவரத்து செய்பவர்களுக்கு உபத்திரவம் ஏற்பட்டு வருவதாக புகார் தெரிவிக்கப்படுகின்றது.

குறிப்பாக பெண்கள் சைக்கிள்களில் வீதியால் செல்லும் போது அவர்கள் அணிந்துள்ள சாரியை கடித்து இழுத்து உபத்திரவம் கொடுத்துவருவதாக தெரிவிக்கப்படுகிறது. கடந்த சில தினங்களாக அதிகமான பெண்களுக்கு இக்கழுதை தொல்லை கொடுத்து வருகிறது. அத்துடன் வீதி விபத்துகளும் ஏற்படுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (72)

## 20,000 தமிழருக்கு நிவாரணமில்லை

(மட்டக்களப்பு)
அம்பாறை மாவட்டத்திலுள்ள சம்மாந்துறை உதவி அரசாங்க அதிபர் பிரிவைச் சேர்ந்த பாதிக்கப்பட்ட 20 ஆயிரம் தமிழ் மக்கள் புனர்வாழ்வு நடவடிக்கைகளில் இட்டமிட்டு புறக்கணிக்கப்படுகிறார்கள்.

மேற்படி பிரிவைச் சேர்ந்த முஸ்லிம்கள் தமக்கான முழு நிவாரணத்தையும் நஷ்டஈடுகளையும் பெற்றிருக்கிறார்கள். (153)

## பாடசாலைகளில் தமிழீழப் படம்

(உடுவில்)
சகல பாடசாலைகளிலும் தமிழீழப்படம் வரையும் பணி தமிழீழத் தேசிய ஆசிரியர் ஒன்றியத்தின் தலைமைச் செயலகத்தினரால் பணிக்கப்பட்டுள்ளது.

இதுசம்பந்தமான வேண்டுகோள் வருதநடைக் கோட்டத்துக்குட்பட்ட கொத்தணி அதிபர்கள் மூலம் பாடசாலை அதிபர்களுக்கு விடுக்கப்பட்டுள்ளது.

தமிழீழத் தேசிய ஆசிரியர் மன்ற ஒன்றியத் தலைவரால் அனுப்பி வைக்கப்பட்டுள்ள இவ்வேண்டுகோளில், சகல பாடசாலைகளிலும் தமிழீழப் படம் வரையப்பட்டு வைக்கப்படவேண்டும் எனவும், படம் வரைவதற்குரிய ஸ்ரென்சில், மை போன்றன வழங்கப்படும் எனவும் விரைவாக இதனை செய்து முடிக்குமாறும் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. (109)

## உதைபந்தாட்டம்: பன்னாலை கணேசன் அணி சாம்பியனாகத் தெரிவு

(யாழ்ப்பாணம்)
சுன்னாகம் மத்திய சிற்றூர் அவையும், றோயல் விளையாட்டுக்கழகமும் இணைந்து நடாத்திய மேஜர் காசி நினைவுக் கிண்ண 7 பேர் கொண்ட உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியில் தெல்லிப்பழை - பன்னாலை கணேசன் விளையாட்டுக்கழகம் சாம்பியனாகியது.

சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரியில் நடைபெற்ற இச்சுற்றுப்போட்டியின் இறுதிப் போட்டியில் பன்னாலை கணேசன் அணி ஈவினை பற்றைக் கும் இளைஞர் அணியை 8-1 என்ற கோல்கணக்கில் வென்று சாம்பியனாகத் தெரிவுசெய்யப்பட்டது.

28 கழகங்கள் வரை இப்போட்டியில் பங்குபற்றின. 3-வது இடத்தை சங்கானை எஸ். பி. கோ. அணி பெற்றது. (இ)

## பாண் உற்பத்தி

(பருத்தித்துறை)
புலோலி ப. நோ. கூ. சங்க பேக்கரிப்பகுதி கடந்தவாரம் தொடக்கம் பாண் தயாரிப்பிலும் ஈடுபட்டுள்ளது. இதுவரை இப்பலநோக்குக் கூட்டுறவுச் சங்க பேக்கரிப்பகுதி பிஸ்கட் மட்டும் தயாரித்து வந்தது.

இப்பகுதிப் பாவனையாளர்கள் இப் பலநோக்குக் கூட்டுறவுச்சங்க பேக்கரி பாண் உற்பத்தியிலும் ஈடுபடவேண்டுமென்ற கோரிக்கையை முன் வைத்தது புதிய இயக்குநர்சபை ஏற்று பாண் உற்பத்தியில் ஈடுபட்டுள்ளது. (52)

## உயிர் பாதுகாப்பு வாரம் அனுஷ்டிக்கமகஜர்

(கொழும்புத்துறை)
யாழ். மாவட்ட இந்து இளைஞர் பேரவை இம்மாதம் 7- ம் திகதி முதல் 12-ஆம் திகதி வரை உலக உயிர்ப் பாதுகாப்பு வாரமாகக் கந்த சஷ்டித் தினத்தை அனுஷ்டிக்குமாறு பிரகடனப்படுத்தும் படி ஐக்கிய நாடுகள் சபைக்கு மகஜர் மூலம் கேட்டுள்ளது.

உலக அமைதிக்கு உயிர்ப் பாதுகாப்பு அவசியமானது என்றும், இன்று மக்கள் அமைதியை நாடுகின்றனரென்றும் அம்மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளது.

நல்லூர் திருஞானசம்பந்தர் ஆதீன குருமகா சந்நிதானத்தின் அருளாணைப்படி உலக உயிர்ப் பாதுகாப்பு வாரம் கொண்டாடப்படவுள்ளது. (154)

# தேசிய விழிப்புணர்வுக்கு கலை முக்கிய அம்சமாகும்

## அன்ரன் பாலசிங்கம் உரை

(யாழ்ப்பாணம்)

அகரீதியாகவும் புறரீதியாகவும் விடுதலை அடையும்போது தான் ஒரு முழுமையான விடுதலை பெற்றதற்கு அறிகுறியாகும்.

இவ்வாறு விடுதலைப் புலிகள் கலைபண்பாட்டுக் கழகத்தினரால் நேற்று மாலை யாழ். இந்து மகளிர் கல்லூரியில் நடைபெற்ற 'இசைஅருவி' நாடா வெளியீட்டின் போது விடுதலைப் புலிகள் இயக்கத்தின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் கூறியதாவது: "எமது இயக்கம் மண்ணை மீட்பதற்கு மாத்திரமன்றி இசை கலைகளை எம்மோடு இணைத்திருக்கின்றது. தேசிய விழிப்புணர்வுக்கு கலை முக்கிய அம்சமாகவும் உள்ளது.

மனித சமூகம் முழுமையான மனித அம்சத்தை அடைவதற்கு நிகழ்த்தும் போராட்டம் விடுதலை ஆகும். உலகில் பல அழுத்தங்களில் இருந்து மனிதன் விலகுவதற்கு தேடுதல் நடைபெற்றது. இந்த ஆன்மீகத் தேடல் அகரீதியாக நடைபெற்றதேயன்றி புறரீதியாக நடைபெறவில்லை. எம்மிடம் உள்ள மூடநம்பிக்கைகளை அகற்றி விடுதலை பெற வேண்டும்.

எமிந்திரிய குறும்படம் ஒன்றில் வியட்நாட்டு மக்களோடு விடுதலையும் இசையும் எவ்வாறு இணைந்துள்ளது என்பதை காண நேர்ந்தது. போராளிகள் காடுகளில் ஆயுதங்கள் ஏந்திச் செல்லும் போது பாடுகிறார்கள். விவசாயிகள் தோட்டங்களில் வேலை செய்யும்போது இசைக்கிறார்கள். விடுதலை இயக்கத்தின் அரசியல் வகுப்புக்குமுன் இந்த இசைப்பாடல்கள் இசைக்கப்படுகின்றது. எமிந்திரிய மக்களின் போராட்டத்தோடு கலையையும், இசையையும் அவர்களது போராட்டத்தோடு இணைத்திருக்கின்றார்கள்.

ஆன்மீகத் தேடலை முழு உலகமும் அகமும், புறமும் பெறுவதற்கு கலை முக்கிய தேவையாக இருக்கிறது. (158)

## உணவுப்பொருள் விநியோகம்

(யாழ்ப்பாணம்)

காரைநகர் பலநோக்குக் கூட்டுறவுச்சங்கம் வழக்கம்பரை அம்பாள் கோவிலடிக்கு அருகாமையில் அமைந்துள்ள கிளையில் பாவனையாளரின் நலன் கருதி தினமும் இரவு 8 மணி வரை வியாபாரத்துக்காக திறந்திருக்கும் என்பதை அறியத் தருவதோடு 'இ' அட்டை 'உ' அட்டைகளுக்குரிய பொருட்களைப் பெறும் பாவனையாளர்கள் குறித்த காலங்களில் பெற்றுக்கொள்ளும்படி கேட்கப்படுகின்றனர்.

## எல்லோருக்கும் உணவு கிடைக்க வேண்டும்

### யோகி உரை

(யாழ்ப்பாணம்)

"எல்லோருக்கும் உணவு கிடைக்கவேண்டும் என்பது தான் எமது இயக்கத்தின் நிலைப்பாடு"

இவ்வாறு யாழ். இந்து மகளிர் கல்லூரியில் நடைபெற்ற 'இசைஅருவி' நாடா வெளியீட்டின்போது விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணிச் செயலாளர் நாயகம் யோகரத்தினம் யோகி பேசும்போது குறிப்பிட்டார்.

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது: "இன்று 25 ஆயிரம் குடும்பங்களுக்கு மேல் கட்டுப்பாட்டு விலைக்கு உணவு வாங்கமுடியாத நிலையில் பட்டினியுடன் இருக்கின்றனர். ஒருசிலர், குத்தகை தமக்குக் கிடைக்காதோ என ஏங்குகின்றனர். அவர்கள் மிகக் கூடிய சம்பளம் பெறுகின்றனர்.

"இன்று இராணுவம் கட்டடக்களப்புப் பகுதியில் அட்டூழியம் செய்கிறது.

"நாடு இருந்தால்தான் கலையை வளர்க்கமுடியும். நாம் சூடுகுழலில் வீரத்தை வளர்க்கின்றவர்கள். அவர்கள் குழலால் இசைமூலம் வீரத்தை வளர்க்கின்றார்கள். நாம் முழுமையாக விடுதலை பெற்றவுடன் தமிழீழத்தில் நாதஸ்வர இசைக்கும், தவிலுக்கும் தனியாகக் கல்லூரிகள் அமைக்க எண்ணியுள்ளோம்" என்றார். (152)

## நரசிம்மராவ் விஜயம்:

# தமிழர் பிரச்னையை தீர்க்க உதவும்?

(சென்னை)

சார்க் மாநாட்டில் கலந்து கொள்ளுமுகமாக இந்தியப் பிரதமர் பி. வி. நரசிம்மராவ் மேற்கொள்ளும் இலங்கை விஜயம், பலநாட்களாக தீர்க்கப்படாமலுள்ள இலங்கைத் தமிழர் பிரச்னையைத் தீர்க்க உதவலாமெனத் தமிழீழ விடுதலை இயக்கம் (ரெலோ) நம்பிக்கை வெளியிட்டுள்ளது.

சென்னையில் நேற்று வெளியிட்ட அறிக்கையிலேயே ரெலோ இயக்கம் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளது.

அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கையில்; இலங்கைத் தமிழர் பிரச்னை முழுமையாகத் தீர்க்கப்படாத வரையில், தமிழகத்தின் அகதி முகாம்களில் உள்ள இலங்கைத் தமிழ் அகதிகளை இலங்கைக்குத் திருப்பி அனுப்ப முயற்சிக்கவேண்டாம் என்றும் தெரிவித்துள்ளது.

தமிழகத்தில் உள்ள இலங்கைத் தமிழ் அகதிகளைப் பாதுகாப்பாகத் திருப்பி அனுப்புவது தொடர்பாக நடவடிக்கை எடுக்கும்படி இந்தியப் பிரதமர் திரு. நரசிம்மராவை கோரும்படி இயக்கம் கேட்டுள்ளது. (ஈ)

## வட அயர்லாந்து குண்டு வீச்சில் இருவர் பலி; பலர் காயம்

(லண்டன்)

வட அயர்லாந்து வைத்தியசாலை தொகுதியொன்றில் ஏற்பட்ட பயங்கர குண்டு வெடிப்பில் 2 பிரித்தானிய படையினர் பலியாகியும் பலர் காயமடைந்துமுள்ளனர்.

இந்த குண்டு வெடிப்புக்கு அயர்லாந்து குடியரசுப்படை ஐ. ஆர். ஏ. பொறுப்பேற்றுள்ளது.

இப்படையினர் ஏழு கிலோ நிறையுடைய குண்டை வைத்தியசாலைக்கட்டிடத்தொகுதிக்குள் கொண்டு சென்ற மர்மம் பற்றி பாதுகாப்பு வட்டாரங்களில் அதிர்ச்சி தெரிவிக்கப்பட்டது.

வட அயர்லாந்தில் பிரிட்டனின் ஆட்சியை முடிவுக்குக் கொண்டுவர ஐ. ஆர். ஏ. 23 வருடங்களாகப் போராடி வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

## பிச்சைக்காரர் நிதிகமவில்

(கொழும்பு)

கொழும்பு மாநகரிலுள்ள பிச்சைக்காரர்கள் காவரும் தென்மாகாணத்திலுள்ள நிதிகம தடுப்பு முகாமுக்கு பொலிசாரினால் அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர். (மா)

## பாவனையாளர் புகார்

(பருத்தித்துறை)

வடமராட்சிப் பகுதியில் உள்ள சில ப. நோ. கூ. சங்கிளைகளிலும். சில தனியார் விற்பனை நிலையங்களிலும் நிறுவைகளில் மோசடிகள் இடம்பெற்றுவருவதாக யாழ்ப்பாண அரசாங்க அதிபர் திரு. கா. மாணிக்கவாசகரிடம் பாவனையாளர்கள் புகார் செய்துள்ளனர். (52)

### யாழ். பல்கலைக்கழக

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

டாக்டர் என். கனகசபை, டாக்டர் ஏ. எஸ். விவேகானந்தன், திரு. கே. பொன்னம்பலம், திரு. கா. மாணிக்கவாசகர், திரு. எஸ். இலகாதசுந்தரம், திரு. இரா. சுந்தரலிங்கம், திரு. கே. தேவசிகாமணி, திரு. ஏ. சோமசுந்தரம்பிள்ளை. (153)

### அரசாங்க

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

லவர்களுக்கும் வழங்கப்படவிருப்பதாகவும் தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

கடந்த வருடம் வரவு-செலவுத் திட்டத்தின்போது கூட்டுத்தாபன ஊழியர்களல்லாதோருக்கு மட்டுமே சம்பள உயர்வு வழங்கப்பட்டிருந்தது. இதனால் இம்முறை கூட்டுத்தாபன ஊழியர்களுக்கும் சம்பள உயர்வு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

### அரசியல்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

செய்துள்ளது.

பிரிட்டனின் உள்துறைச் செயலர் திரு. கெனத் பேக்கர், புதிய சட்டம் தொடர்பான பல ஆலோசனை முன்வைத்துள்ளார்.

பிரிட்டனில் அரசியல் தஞ்சம் கோரி வருவோர் மீது, பிரிட்டிஷ் அரசு கொண்டுவர விரும்பும் கடுமையான நடவடிக்கைகள் குறித்து ஐக்கிய நாடுகள் சபை பலத்த கண்டனம் தெரிவித்துள்ளது.

1988ம் ஆண்டு பிரிட்டனில் அரசியல் தஞ்சம் கோரியவர்களின் எண்ணிக்கை 5,000 ஆகும். ஆனால் இவ்வருடம் இத்தொகை 50,000த்தையும் தாண்டிவிடுமென மதிப்பிடப்பட்டுள்ளது. இதில் இலங்கையரின் எண்ணிக்கை 2,661 ஆகும். (மா)

### கண்டி பன்னலயில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ளும், கட்டடங்களும் சேதம் அடைந்துள்ளதாகக் கூறப்படுகிறது. தனது கொலைப்படை அரசு

மூலம், தம்மைக் கொலைசெய்யத் தூண்டுகிறது என்றும் தங்கள் உயிருக்கு ஆபத்துள்ளதென்றும் அதிருப்தி கோஷ்டியினர் முன்னரே தெரிவித்து வந்தது குறிப்பிடத்தக்கது. (மா)

## போட்டிப் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கல்விச் சேவைக்குழு சேவைமூப்பு திறமை அடிப்படையில் பதவியுயர்வு வழங்குதல் மூலம் இலங்கை கல்வி நிருவாகச் சேவையின் IIIஆம் வகுப்பிற்கு அலுவலர்களை ஆட்சேர்ப்பதற்கு உத்தேசித்திருக்கிறது.

மேற்படி ஆட்சேர்ப்பதற்கான போட்டிப் பரீட்சை அடுத்தமாதம் 28ந் திகதி கொழும்பில் நடைபெறவிருக்கிறது. (153)

## அச்சுவேலி ஆஸ்பத்திரிக்கு அம்புலன்ஸ்

(அச்சுவேலி)

அச்சுவேலி அரசினர் வைத்தியசாலைக்கு மீண்டும் அம்புலன்ஸ் வண்டி வழங்கப்பட்டுள்ளது.

அச்சுவேலி அரசினர் வைத்தியசாலைக்கு ஏற்கனவே வழங்கப்பட்டிருந்த அம்புலன்ஸ் வண்டி இடமாற்றப்பட்டிருந்தது. பொது ஸ்தாபனங்கள் இது பற்றி மாவட்டச் சுகாதார அத்தியட்சகரின் கவனத்திற்குக் கொண்டுவந்ததை அடுத்து, மாவட்டச் சுகாதார அத்தியட்சகர் மேற்கொண்ட துரித நடவடிக்கையை அடுத்து மீண்டும் அம்புலன்ஸ் வண்டி வழங்கப்பட்டுள்ளது. (74)

### மட்டக்குளி

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வீடு கண்டுபிடிக்கப்பட்டது.

இது தொடர்பாக ஐந்து தமிழ் இளைஞர்கள் உட்பட 9 பேர் கைது செய்யப்பட்டுள்ளார்கள்.

மேலும் இப்பொருட்கள் இந்த வீட்டுக்கு எவ்வாறு வந்தது என்பது பற்றி ஆராயுமுகமாக ஒரு பெண் உட்பட நால்வர் பலத்த விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்கள். (153)

### ஸ்ரீ. ல. சு. க. கட்சி

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கட்சியில் சேருவார் என்று தெரிவித்துள்ளார்.

அத்துடன் ஜனநாயக தேசியக் கட்சியில் ஐ. தே. கட்சி அதிருப்தியாளர் குழுவினரான லலித்-காமினி கோஷ்டியினரும் இணைக்கூடிய சாத்தியக்கூறுகள் இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

பொதுத்தலைமைத்துவத்தின் கீழ் பல்வேறு கட்சிகள் அணிதிரளவுமாறு என்று திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா அண்மையில் கருத்து வெளியிட்டு இருந்தார். அத்துடன் லலித்-காமினி கோஷ்டியினர் புதிய அரசியல் கட்சியை ஆரம்பிப்பதற்கான ஏற்பாடுகளையும் செய்து வருகிறார்கள்.

இந்த அடிப்படையில் ஸ்ரீ. ல. சு. கட்சியும் ஐ. தே. க. அதிருப்தியாளர் குழுவும் ஒன்றாக இணையும் சாத்தியக்கூறுகள் இருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

### கருப்புசாமி

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கும் விதமாகவே இந்திய பிரதமர் திரு. பி. வி. நரசிம்மராவ் இலங்கையில் மிகக் குறுகிய நேரம் தங்கியிருப்பதற்கு காரணமென்று தெரிவிக்கப்படுகிறது. அத்துடன் இந்தியாவில் நடைபெறவிருக்கும் இடைத்தேர்தலும் திரு. நரசிம்மராவ் இலங்கை விஜயத்தின் போது குறுகியநேரம் தங்கியிருப்பதற்கு மற்றொரு காரணம் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளையில் கொழும்பில் பாதுகாப்பு நிலைமை குறித்து இந்திய அரசு தீவிர கவனத்தில் எடுத்தால் இந்திய பிரதமரின் விஜயம் கட்டுப்படுத்தப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

### ஆனையிறவு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

நான்கு பொது மக்கள் பலியாகினர்.

பத்துக்கும் மேற்பட்ட தடவைகள் ஷெல் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டதாகவும் பொது மக்கள் நெருக்கமாக வாழும் பகுதிகளில் ஷெல்கள் வீழ்ந்து வெடித்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ஈ)

### தென்பகுதி

(1ம் பக்கத் தொடர்ச்சி)

நடைபெறும் வேளையில் மற்றொரு குண்டுவெடிப்பு சம்பவம் நிகழாதென தென்பகுதி மக்கள் எதிர்பார்ப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளையில் சார்க் மாநாடு நடைபெறும்போது பொதுமக்கள் தமது அன்றாட அலுவல்களை எத்தவித அச்சமுமின்றி வழமை போல் மேற்கொள்ளுமாறு அரசு கேட்டுள்ளது.

பொதுமக்கள் தமது அன்றாட அலுவல்களையும் பயணங்களையும் விழிப்புடன் மேற்கொள்ளுமாறு பாதுகாப்பு அமைச்சு கேட்டுள்ளது. (மா)

## பயிற்சி

(யாழ்ப்பாணம்)

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தால் அப்பளம் தயாரித்தல், வாழைப்பூவில் இருந்து வடகம் தயாரித்தல், பிரம்பின் கதிரைகள் பின்னுதல் ஆகிய பயிற்சிகள் இன்று திங்கட்கிழமை ஆரம்பமாக இருக்கிறது.

பயிற்சி பெற விரும்புவோர் இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கயாழ்கிளையுடன் தொடர்பு கொள்ளலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மாணவருக்கு விசேட அட்டை

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக் கழகத்தில் தற்போது கல்வி பயின்று வரும் வெளி மாவட்ட மாணவர்களுக்கும், ஆசிரியப் பயிற்சிக் கலாசாலையில் கல்வி கற்று வரும் வெளி மாவட்ட மாணவர்களுக்கும் அத்தியாவசிய உணவுப் பொருட்களைப் பெற்றுக் கொள்வதற்காக விசேட அட்டைகள் வழங்கப்படவுள்ளது.

இவ்வட்டைகள் அந்தந்தக் கலாசாலை அதிபர்களினால் இன்று முதல் வழங்கப்படும். (வி)

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி 62-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1991-ம் ஆண்டு நவம்பர் மாதம் 4-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Registred as a News Paper at the General Post Office Sri Lanka under Licence Number B/10336/31.